சார்பு நீதிமன்றம், மேலூர்
OS No. 359/2021

பெயர் : S.சலீம்
தகப்பனார் பெயர் :ஷேக்தாவூத்
கணவர் பெயர் :
வயது :62
கிராமம் :மேலூர்
வட்டம் :மேலூர்
தொழில் :ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

20.01.2026

பி.வா.சா.2 முதல் விசாரணை:

எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்தது. அந்த அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். காதர் மைதீன் என்னுடைய அப்பாவுடன் பிறந்த அண்ணன் ஆவார். வாதி ராஜா முகமது என் பெரியப்பா காதர்மைதீனுடைய முதல் தாரத்து மகன் ஆவார். இந்த வழக்கின் 1ம் பிரதிவாதி கமால், 2ம் பிரதிவாதி நூர்ஜஹான், ஆகியோர் காதர்மைதீனின் முதல் தாரத்து பிள்ளைகள் ஆவார். இந்த வழக்கின் 6ம் பிரதிவாதியான மரியம்பீவி, காதர்மைதீனின் 2ம் தாரம் ஆவார். 6ம் பிரதிவாதி மரியம் பீவி தற்போது உயிருடன் இல்லை. 3 முதல் 5 பிரதிவாதிகளான முகமது சிக்கந்தர் மைதீன், ஷேக் தாவூத், செய்யது இப்ராகிம் ஆகியோர் காதர்மைதீனின் 2ம் தாரதத்து வாரிசுகள் ஆவர். தற்போது காதர்மைதீன் உயிருடன் இல்லை. சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பே காதர்மைதீன் காலமாகிவிட்டார். தேதி நினைவில்லை. பி.சா.ஆ.5 குடும்ப ஏற்பாட்டு ஆவணம் சாட்சியிடம் காட்டப்பட்டு, சாட்சி அதை பார்வையிட்டு, அதில் உள்ள சாட்சிகள் கையெழுத்தில் 3வது கையெழுத்து தன்னுடையதுதான் என்று சாட்சி குறிப்பிடுகிறார். ஆனால் தேதி தனக்கு நினைவில்லை என்று சாட்சி குறிப்பிடுகிறார். எனக்கு மேற்படி சம்பவம் முழுமையாக நினைவில்லை. என்னுடன் யார் கையெழுத்து செய்தார்கள் என்பது தெரியவில்லை. எனக்கு அப்போது திருமணமான புதிது. விருந்துக்கு

ஊருக்கு சென்றிருந்த போது கையெழுத்து போட்டிருக்கலாம். காதர்மைதீனின் 2 தாரத்துக்கும் இடையே சொத்து தொடர்பாக பிரச்சினை இருந்து வந்தது. மேலூர் பெரியபள்ளிவாசலில் வைத்து அப்போது பிரச்சினை பேசப்பட்டதாக கேள்விப்பட்டேன். காதர்மைதீனின் முதல் தாரத்து மூத்த மகன் இந்த வழக்கின் 1ம் பிரதிவாதி கமால், 2வது குழந்தை நூர்ஜஹான் இந்த வழக்கின் 2ம் பிரதிவாதி, வாதி இளைய மகன். அப்போது காதர்மைதீன் தன்னுடைய தந்தை வழி கிடைத்த சொத்தை ஒருபகுதியை மூத்த மகனான 1ம் பிரதிவாதி கமாலுக்கும், மகளான நூர்ஜஹானுக்கும் கொடுத்தார். எவ்வளவு கொடுத்தார் என்று நினைவில்லை. வாதி ராஜா முகமதுவுக்கு தன்னுடைய மூத்த மனைவி சகினாவின் தந்தை வழி சொத்தை எடுத்து கொள்வதாக பேசப்பட்டது. மீதமுள்ள சொத்தை என்னுடைய பெரியப்பா காதர்மைதீன் அவரே வைத்துக்கொண்டார். அவருடன் இளையதாரம் சேர்ந்து வாழ்ந்து வந்ததால் தனியாக அவர்களுக்கு சொத்து ஒதுக்கப்படவில்லை. இதுதொடர்பாக ஆவணம் எழுதப்பட்டதில் தான் பி.சா.ஆ.5. ஆவணத்தில் நான் சாட்சியாக கையெழுத்திட்டுள்ளேன். நான் பி.சா.ஆ.5 ஆவணத்தை முழுமையாக படித்து பார்க்கவில்லை. என் பெரியப்பா சொன்னவுடன் அதில் கையெழுத்து செய்துவிட்டேன். என்னுடன் யார் யார் சாட்சி கையெழுத்திட்டார்கள் என்று நினைவில்லை. ஒரே நேரத்தில் அனைத்து சாட்சிகளும் கையெழுத்திட்டதாக தெரியவில்லை. பி.சா.ஆ.5 ஆவணம் சாட்சியிடம் காட்டப்பட்டு, அதில் உள்ள ஷரத்துக்கள் பற்றி தனக்கு நினைவில்லை என்று சாட்சி குறிப்பிடுகிறார். பி.சா.ஆ.5 ஆவணத்தில் காதர்மைதீன் எதிர்காலத்தில் சுயார்ஜிதமாய் பெற்று அடையக்கூடிய சொத்துக்களை பொறுத்தோ, அல்லது மூத்த மனைவின் மக்களை பொறுத்தோ, எவ்வித பின் துயர்ச்சியும், பாத்தியமும் கிடையாது என்று எழுதப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி நினைவில்லை. நான்

நன்றாக விபரம் தெரிந்தும் வாதிக்கு ஆதரவாக நினைவில்லை என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2026.01.20 23:08:31 +0530

Sub Judge
Melur